11th November 1965]

மருந்துகளை மருத்துவர்கள் சிபார்சு செய்வதில்லை என்று அவர்கள் புகார் கூறியிருக்கிறார்கள். எனவே அந்தப் புகார் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருச்சியில் நடந்த கான்ஃபரன்சில் அவர்கள் கொடுத்த ரிசல்யூஷனை டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசசுக்கு அனுப்பி, அதைப் பரிசீலனை செய்து ரிப்போர்ட்டு அனுப்பும்படி அரசாங்கம் கூறியுள்ளது.

Physically Handicapped

* 464 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to impart industrial training to the physically handicapped and the blind; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Proposals for the establishment of two Light Engineering Projects for the training of the Adult Blind, one sponsored by the Government of India and the other by the American Foundation for Overseas Blind, are under examination.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்தில் பல பயிற்சி பெற்ற கண் இழந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். நான் ஒன்றிரண்டு பேர்களை மந்திரி அவர்களிடம் கொண்டுவந்து, அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். ஆனால் மந்திரி அவர்கள் வேலை கிடைப்பது அரிது என்று கையை விரித்து விட்டார்கள். ஏற்கனவே வேலை தெரிந்த, தொழிற் பயிற்சி பெற்ற கண் இழந்த இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது தொழிற் பயிற்சி வசதி கொடுப்பது பற்றிய கேள்வி. பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சொல்லலாம்.

சரஸ்வதி மஹால் நூல் நிலையம், தஞ்சை

* **465 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தை தேசிய நூல் நிலையமாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[11th November 1965

திரு. து. ப. அழகமுத்து : தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் முக்கியத்துவத்தை உத்தேசித்து, அதை தேசிய நூல் நிலையமாக மாற்றுவதற்கான திட்டத்தை இனிமேலாகிலும் சர்க்கார் மேற்கொள்ள முற்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நூல் நிலையத்தின் முக்கியத்துவத்தை சர்க்கார் நன்ருக உணர்ந்திருக்கிறது. அதை எவ்வாறு பாராமரிப்பது, மேலும் எவ்வாறு விஸ்தரிப்பது என்பதில் பரிபூரண கவனம் செலுத்தி வருகிறது. அதற்கு மேலே தேசிய நூல் நிலையம் என்று ஒரு பெயர் கொடுப்பதிலே என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அரசாங்கம் சில திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்தத் திட்டங்களினுல் இந்த நூல் நிலையத்திற்கு என்னென்ன பலன் கிடைக்குமோ அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த நூல் நிலையத்தில் பழைய அருமையான நூல்கள் பல இருக்கின்றன. அந்த நூல்களைப் படிக்க வேண்டுமென்ருல், எல்லோரும் அங்கே போய் படிப்பது என்பது முடியாது. ஆகையால் அந்தப் புத்தகங்களை அச்சடித்து மக்களுக்கு வழங்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஆண்டு தோறும் அச்சிடப்பட்டு பல பிரசுரங்கள் வெளி வந்திருக்கின்றன.

திரு. ப. உ. சண்முகம் : அப்படி வெளியிடப்படுகின்ற புத்தகங்களின் விலை ரொம்பவும் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அந்த புத்தகங்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் யாரும் தெரிவிக்கவில்லை. இந்தப் புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆவதில்லை. அதிகமாக விற்பனையானுல், இன்னும் அதிகமான பிரதிகள் போடலாம், அச்சு செய்வதற்கான செலவு குறையும். இப்பொழுது அச்சிடுவதற்கான செலவைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் விலை நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

சென்னை அடிஷனல் லேபர் கோர்ட்

* 466 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அடிஷனல் லேபர் கோர்ட் மூடப் பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Since the constitution of the additional Labour Court at Madras with effect from 11th September 1964, it had disposed of 203 out of 227 cases transferred to it from the Labour Court at